**O.S. No. 185 /2014**

**Date:10.03 .2026**

**பிவா.சா 2 முத்துப்பாண்டி**

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் எத்தனை காலமாக பத்திர எழுத்தராக உள்ளேன் என்றால் 1992 முதல் உள்ளேன். இது வரைக்கும் நான் எத்தனை பத்திரங்கள் எழுதியிருப்பேன் என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது. 2004ம் ஆண்டில் நான் எத்தனை பத்திரம் எழுதியுள்ளேன் என்றால் ஞாபகம் இல்லை. 2004ம் வருடத்தில் யார் யாருக்கு எல்லாம் பத்திரம் எழுதினேன் என்று ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. எனக்கு சாட்சியம் அளிக்க அழைப்பாணை வந்தது அதில் என்ன எழுதியிருந்தது என்றால் உயில் ஆவணத்தை தயார் செய்ததன் அடிப்படையில் உயில் பற்றி சாட்சியம் அளிக்க வேண்டும் என்று எழுதப்பட்டு இருந்தது. நான் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு எழுதிய உயில் பத்திரத்தை மருதாத்தாள் என்னிடம் காட்டி நான் படித்து பார்த்து வந்தேன். அழைப்பாணை எனக்கு கிடைக்கபெற்று 2 நாட்கள் கழித்து மருதாத்தாள் என்னிடம் உயில் ஆவணத்தை காட்டினார். நான் உயில் ஆவணத்தை பார்த்ததன் அடிப்படையில் சாட்சியம் அளித்தேன். 2004ல் எழுதப்பட்ட அனைத்து பத்திரங்கள் சம்மந்தமாக எனக்கு ஞாபகம் இல்லை. உயில் ஆவணத்திற்கு சொத்து விவரம் யார் சொன்னது என்று கேட்டால் எனக்கு பட்டா, அடங்கல் உள்ளிட்ட ஆவணங்களை ஆவுடையம்மாள் கொடுத்தார்கள். ஆவுடையம்மாள் கணவர் பெயர் கண்ணப்ப தேவர். மேற்படி கண்ணப்ப தேவரை நான் பார்த்தது இல்லை. கண்ணப்பத் தேவர் மனைவி ஆவுடையம்மாள் என்பதை எந்த ஆவணத்தின் அடிப்படையில் உறுதி செய்தேன் என்றால் குடும்ப அட்டையின் மூலம். மேற்படி குடும்ப அட்டை எந்த ஆண்டு வழங்கப்பட்டது என்றால் ஞாபகம் இல்லை. நான் சொல்லக்கூடிய குடும்ப அட்டை பிரதிவாதிகளால் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம் என்றால் உண்மைத்தன்மையைப் பற்றி என்னால் சொல்ல முடியாது. நான்

சொல்லக்கூடிய ஆவுடையம்மாள் என்பவர் கண்ணப்பத் தேவர் மனைவி கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 1 உயில் ஆவணத்தில் சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ள நபர்கள் எங்கள் அலுவலகத்தில் பணிபுரியம் நபர்கள் என்றாலும், அவர்களை வைத்து போலியாக ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. ஆவணத்தை எழுதிக் கொடுத்த நபருக்கும் அதில் கண்ட தபசில் சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் கிடையது என்றாலும், போலியான ஆவணங்கள் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பி.வா.சா.ஆ.1 உயில் ஆவணம் சட்டப்படி செல்லக்கூடியதல்ல என்றாலும், எனது சாட்சியமும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை நிரூபிக்கக்கூடிய சாட்சியம் இல்லை என்றாலும் சரியல்ல.

Sd/-P.Mahindra Varma,
Subordinate Judge,
Sankarankovil.